# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2099/36 - 2018 නොවැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2018.11.30

*2099/36 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 11/3/3/1/32பீ.
குறிப்பு இல.: எல்டீ/05/2010/எம்வீ/54.

மொரகஹகந்த/ களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை/ ஆட்சி உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு பகிரங்கத் தேவை என்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கான காணிச் சுவீகரிப்பாகும்

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், லக்கல-பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவிலே லக்கல பல்லேசிய பத்துவவில், ஈ 389 ரம்புக்ஒழுவ கிராம அலுவலர் பிரிவிலே அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2018.11.14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட, பி.ஆ வரைபட இலக்கம் 13, குறைநிரப்பி இல. 98, பத்திர இலக்கம் 249 இல் காட்டப்பட்டுள்ள 0.1723 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டுகள்:

*01.* **துண்டுஇல. 9578**

காணியின் பெயர்: கல்வங்கெடிய கும்புர; விபரம்: வயல்; உரிமை கோருவோர்: தனியார்; பயனுறுபவர்: லக்கல பல்லேகம, ரம்புக்ஒழுவ இல் வதியும் இஹல கெதர புஞ்சி பண்டா; விஸ்தீரணம்: 0.1723 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் வருடம் 01 மாதம் 04 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு லக்கல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை உரிமை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத்தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018ஆம் வருடம் 12 மாதம் 27 ஆந் தேதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ்.டீ.பி.ஜயசூரிய,
பிரதேச செயலாளர்,
லக்கல - பல்லேகம.

பிரதேச செயலகம்,
லக்கல - பல்லேகம.
2018, நவெம்பர் 26.

*12-391*


1A - G 29030 - 17 (2018/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*